1967 ஜூலை ப்ர

திரு ந. தருமலிங்கம் : தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யத்தில் ஒரு டெப்டி தாசில்தார்தான் இருக்கிறுர். அங்கே ஒரு துணைக் கருவூலம் அமைக்கவேண்டும் என்று நீண்ட காலமாக அரசாங்கத்திற்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதை உடனடியாக அமைக்கிற எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா?

மாண்புமிகு திரு சி. என். அண்ணுதுரை : இந்தக் கேள்வி பள்ளிப் பட்டில் துணைக் கருவூலம் அமைப்பது பற்றியது. ஆகவே, இதனுடைய தொடர்பாக வேறு கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி பள்ளிப் பட்டில் துணைக் கருவூலம் அமைப்பது பற்றியது. கனம் உறுப்பினர்கள் அதுபற்றி கேள்விகள் கேட்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : In view of the local importance of this question, will the Government take up for consideration the construction of office buildings at least for the independent Deputy Tahsildar ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Even without local importance the question assumes importance because of the importance of the hon. member. But financial considerations only refrain us from taking up that matter.

கல்லூரிக் கட்டடங்கள்.

*** 144 வினு—திரு மா. பா. சாரதி :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேலூர் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடங்கள் கட்டுவதற்கு நிலம் வாங்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது கட்டடங்கள் கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அதிக அளவில் முதலீடு செலவுகளை, தவிர்க்கும் பொருட்டு இந்த வேலையைத் தற்போது எடுத்துக் கொள்ள உத்தேசம் இல்லை.

*** 145 வினு—திரு. மா. பா. சாரதி :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேலூர் முத்துரங்கம் அரசினர் கலைக் கல்லூரிக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கான நிலம் வாங்கப்பட்டுவிட்டதா?

(இ) ஆம் எனில், கட்டடங்கள் எப்பொழுது கட்டப்படும்?

(உ) அதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள செலவுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இந்த வேலையை நடப்பு ஆண்டிலேயே துவக்க உத்தேசிக்கப்பட்டு இருக்கிறது.

(உ) ரூ. 8.50 லட்சம்.

திரு. ரா. ரா. முனுசாமி : வேலூர் முத்துரங்கம் அரசினர் கலைக் கல்லூரிக்கு நிரந்தரமான கட்டடங்கள் கட்டுவதற்கு நிலம் வாங்கப்பட்டதா? ஆமெனில், எப்பொழுது கட்டடம் கட்டி முடிக்கப்படும் ?